REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஓர் அணா
திருவாங்கூரில் 10 சக்கரம்

மலர் 1] [இதழ் 18

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: தைதீ 3உ. சனி (16—1—54) ★ ★ ★ வெளியூர்: தைதீ 4உ. ஞாயிறு (17—1—54)

சிறு குழந்தைக்குத் தொழில் பயிற்சி அளிப்பது உலக விசித்திரம்!

—(:)—

பாதிப் படிப்பு, கல்வித் தரத்தை திரு—கொ.-வில் மட்டமாக்கி விட்டது

—(:)—

கல்லாத பெற்றோரின் குழந்தைகள் புதிய திட்டத்தினால் குட்டிச்சுவராகும்

சென்னை சர்க்கார் புத்திபெற திரு-கொச்சியை கருதட்டும்

"வேறு எந்த நாகரிக நாட்டிலும் கேட்டறியாத, சிறு குழந்தைகட்கு, தொழிலொன்றைப் போதிப்பது என்பதைத் தவிர, இப்புதிய கல்வித் திட்டத்திற்கும், திருவிதாங்கூரில் பல ஆண்டுகளாய், 1 முதல் 5-வது வகுப்பு வரை நடைமுறையில் இருக்கும் 'ஷிப்டு' முறைக்கும் அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை."

"ஆனால், சென்னை அரசாங்கத்தார், திரு.-கொச்சி மாநிலத்தில் நடைமுறையிலிருக்கும் 'ஷிப்டு' முறை எப்படி வேலை செய்கிறதென்பதையறிய முயற்சி எடுத்துக்கொண்டிருந்தால், அதை நடைமுறைக்குக் கொணர இவ்வளவு அவசரப்பட்டிருக்க மாட்டார்கள்."

"தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரியாயிருந்த காலத்தில், திரு-கொச்சியின் 'ஷிப்டு' முறையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அங்கு வந்தார். 'ஷிப்டு' முறை இருந்த பள்ளிகளைப் பார்வையிட்டதோடு, பள்ளி ஆசிரியர்கள் பலரையும் சந்தித்தார். அதிகாரிகள் பலரின் முயற்சிக்கும் மாறாக, அவர் அம்முறையைப்பற்றி நல்லெண்ணம் கொள்ளவில்லை."

"தென்னிந்தியாவில் இப்போது நடப்பதெல்லாம், கல்வியின் தரத்தை வெகுவாகக் குறைப்பதும், கல்வியைப் பரவலாக்குவதற்காக, கல்வித் தரத்தைப் பாழாக்குவதும்தான்."

"'ஷிப்டு' முறையில் சாதாரண மனிதர்களின் குழந்தைகள் கஷ்டப்படுவர்; நல்ல நிலையிலிருந்து தனியாக பணம் தந்து கல்வி கற்றுத் தரும் நிலையிலுள்ளவர் குழந்தைகள் நன்றாகப் படிப்பர்."

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, பல பள்ளிகளின் வேலை முறையைப் பார்க்க முடியாமலேயே, எதிர்பார்த்தபடி, தனது ஆதரவை திட்டத்திற்குத் தந்துள்ளது.

பள்ளி ஆசிரியர்களை அதிகரிக்காமலேயே வகுப்புகளை இரட்டிப்பாக்குவதே திட்டமெனவும், குறைந்த செலவில் அதிகக் குழந்தைகளைப் பயில்விப்பதே திட்டத்தின் நோக்கமெனவும் தெரிகிறது.

திரு-கொச்சியில் கல்வி நே[illegible] இம்முறை எவ்வளவு கேடு பயக்கிறது என்பதை அறியும்போது, சென்னை அரசாங்கம் புகுத்தியுள்ள கல்வித் திட்டம் புத்திசாலித்தனமானதென்று நினைக்க முடியவில்லை.

திரு. கொச்சி அரசாங்கம் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியைக் கொண்டு வர வேண்டும் என்கிற ஆவலில், அதற்கான செலவுகளை மேற்கொள்ளாமலேயே 'ஷிப்டு' முறையைப் புகுத்தியது.

பள்ளி நேரம் வீண்போகாமலிருக்கவே இம்முறை என்று சொல்லி, காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் மத்தியானம் 1 மணி நேரம் இடைவேளை [illegible], சனிக்கிழமைகளிலும் பள்ளியை நடத்தினர். இதனால் ஒவ்வொரு பகுதி மாணவரும் 3½ மணி நேரம் மட்டும் படித்தனர். ஆசிரியர்கள், காலை 9-மணி முதல் மாலை 5 மணி வரையில் தினமும் சனிக்கிழமைகளிலும் வேலை செய்வது சாத்தியமற்றதென்று சொல்லிவிடவே, வேறெல்லாப் பள்ளிகளையும் போலவே, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் மட்டும் கல்வி பயில்வும், சனிக்கிழமையில் பள்ளியை மூடிவிடவும் செய்தனர். இதனால் மாணவர்கள் தினசரி 2½ மணி நேரம் மட்டுமே கல்வி பயில முடிந்தது.

இந்த 'அரைப் படிப்பு' திரு-கொச்சியை பொறுத்த வரையில், கல்வித் தரத்தைக் கீழான நிலைக்குக் கொண்டு செல்லவே செய்தன.

ஆசிரியர்கள், முதல் வகுப்பைத் தவிர, மற்றவைகளில், இந்த 2½ மணி நேர காலத்தில் எல்லாப் பாடங்களையும் சொல்லித் தர முடியாதென்பதை உணர்கின்றனர்.

பாதி நாள் தெருவிலோ, வீட்டிலோ மாணவர்களின் நேரம் வீணாக்கப்படுகிறது. தங்களின் பெற்றோர்களிடமிருந்தோ, அல்லது தனிப்பட்ட ஆசிரியர்களிடமிருந்தோ கல்வி கற்றுக் கொள்பவர்களைத் தவிர, மற்ற கல்வியறிவற்ற பெற்றோரின் குழந்தைகள் எல்லாம், தேவையான தரத்திற்கு மிகவும் அப்பாலிருக்கிறார்கள்.

பொதுமக்களின் கிளர்ச்சிக்கு அஞ்சி, கல்வி அதிகாரிகளும், குழந்தைகளில் அதிகமான பேர்களை வகுப்புத்தேர்வுகளின், 5-ம் வகுப்பு வரை நிறுத்தாது அனுப்பி விடுகின்றனர். இம்மாணவர்கள் இடைக் கல்வியின் முதல் வகுப்பான, முதல் படிவத்திற்கு வருகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் கிழட்டு மாமியார்! கம்யூனிஸ்டு கட்சி உடற்கட்டுள்ள இளமருகி!

—(:)—

'இந்தியர்கள்' தாரத்தை மறந்து, தாயைப் போற்ற வேண்டும் என்று சி. ஆர். உபதேசம்!

கோட்டயம், ஜன. 14—

திருவாங்கூர்-கொச்சி பொதுத் தேர்தல் சம்பந்தமாய் வைக்கத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், சென்னை முதலமைச்சர் இராசகோபாலாச்சாரி, காங்கிரசையும் பொதுவுடைமையையும் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரசு, ஒரு வயது முதிர்ந்த தாய்; பொதுவுடைமை, அழகும் இளமையும் பொருந்திய ஒரு மனைவி.

"இந்தியாவில் உள்ள காங்கிரசையும், பொதுவுடைமையையும் இந்தியர்கள் கொள்ளவேண்டிய முறை இதுதான்.

"வயது முதிர்ந்து விட்டதென்ற ஒரே காரணத்தை மட்டும் வைத்து, தாயை மறந்து தள்ளிவிட்டு, தாரத்தின்மீது அதிக நம்பிக்கையும், அன்பும் காட்டுவது, நன்றிகெட்ட செயலாகும்.

"இளம் மனைவி இன்று, அழகியாகவும், கண்ணுக்கு இனிமையாகவும் தோன்றலாம்; ஆனால், அந்த அழகும் இளமையும் நிரந்தரமானதல்ல.

"நாளாவட்டத்தில், இளம் அழகிய மனைவியும், தாய் மாதிரி முதுமைக் கட்டத்திற்கு வந்துதானாக வேண்டும்.

"வயது முதிர்ந்த தாய், நமக்கு உணவு கொடுத்தாள், கொடுக்கிறாள், நம்மை முன்னுக்குக் கொண்டுவந்து மனிதனாக்கினாள்; நமது நலனிலேயே நாட்டமாயிருக்கிறாள்; இந்த அருமைத் தாய், தனது வாழ்வின் கடைசிக் கட்டத்தில நிற்கிறபோது, அவள், நமக்குச் செய்த நலன்களுக்குப் பதிலாக, நாம் அன்பையும், பாராட்டையும் செலுத்தபோகிறது நலலதல்ல.

"காங்கிரசை ஆட்சிப் பீடத்திலிருந்து பெயர்த்துவிட்டால், அதன் அடுத்த கட்டத்தில் நாம் சந்திப்பது அழிவாகத்தான் இருக்கும். ஒரு முறையான ஆட்சி என்பதற்கு அடையாளம் காங்கிரசு ஒன்றுதான்; ஆகவே, அதுதான், இந்திய ஆட்சியை வகிக்கவேண்டும்.

"தற்போது நீங்கள் சொல்லும் பொதுவுடைமைக்கும், உண்மையான பொதுவுடைமைக்கும், அதிக வேறுபாடுண்டு என்றார்."

புதிய திட்டத்தால் பள்ளி செல்வோர் தொகை பெருகவில்லை

ஒரு வேளை ஓய்வினால் சிறார்கள் தீய பழக்கங்களுக்கு பலியாகின்றனர்

பல ஆசிரியர்களின் வேலை தொலைவது நிச்சயம்!

"புதிய கல்வித் திட்டம் அமுலில் இருக்கும் கிராமங்களில், உண்மையில் ஆஜர் குறைவதல்லாமல், அதிகமாகவில்லை. இத்திட்டம், திருப்திகரமாக நடக்க வேண்டுமாயின், கட்டாயக் கல்வியைத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவந்து, 5 மணி நேரத்திற்குப் பதில் 6 மணி நேரம் உழைக்கும் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தினால்தான், இத் திட்டம் ஒருவாறு உருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறபடியால். வேண்டுவன செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது."

"பள்ளியினின்று வெளியே (ஒரு வேளை) செல்லும் குழந்தைகளுக்குக் கைத்தொழில் கற்றுக்கொள்ள கொஞ்சங்கூட வசதியில்லையாதலால், அவர்களின் படிப்புக்குக் கேடேல் ஏற்படுவதோடு, கெட்ட பழக்கங்களுக்கும் வழியேற்படுகிறபடியால், புதுக் கல்வித் திட்டம் நல்ல பயன் அளிக்காதென நம்பப்படுகிறது. மேலும், புதுக் கல்வித் திட்டத்தினால் அநேக ஆசிரியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமெனத் தெரிகிறது."

— இவ்வூர், 9—1—54ல், திரு. ஆர். சிவசாமிநாத பிள்ளை [illegible] வில்கடைபெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா பள்ளி ஆசிரியர் சங்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் தீர்மானங்கள் மற்றவை வருமாறு:—

"ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகையும், பஞ்சப்படியும் [illegible] ஆசிரியர்களுக்குப் பணிப்படியும் கொடுத்துதவும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது."

வாழ்த்தும்—நன்றியும்

★

எங்களுக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்களுக்கு எங்கள் வாழ்த்தும், நன்றியும் தனித் தனியாக எழுத முடியாமைக்கு மன்னிக்கவும்.

16—1—'54. மதியழகன், வாணன்.

நம் நாடு

தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—1—1954 சனி

அடிப்பயோ?.. சிங்கண்டா

'சகுந்தலை' திரைப் படத்தில், வயிறு வெடிக்கச் செய்யும் நகைச்சுவை காட்சி ஒன்று உண்டு. மீன் பிடிப்பவர்களாக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், நண்பர் துரைராஜ் அவர்களும் நடிக்கிறார்கள். மீன் பிடிக்கும் துரைராஜ் வலை வீசிப் பிடித்த மீனை, தாம்தான் பிடித்ததாகக் கூறி, அவர் கையில் இருந்த மீனை, நகைச்சுவை அரசர் பலவந்தமாகப் பிடுங்க முயற்சிக்கிறார்; மீனுக்கு உரிமை உடையவர் கொடுக்க மறுக்கிறார்; வலுச் சண்டைக்குச் சென்ற இரண்டாமவர், மீன் கொடுக்க மறுத்தவரை அடிக்கத் துவங்குகிறார்; நண்பர் துரைராஜ், அடியை வாங்கிக் கொண்டு, 'அடிப்பயா? உங்கப்பய மகனே! சிங்கண்டா!' என்று, அடி விழும்போழுதெல்லாம் அழுதுகொண்டே கூறுகிறார். இந்தக் காட்சியையும், வார்த்தைகளையும் காண்போர் எவருக்குத்தான் சிரிப்புப் பொங்காமல் இருக்கும்?

இந்தக் கதையை நினைவுபடுத்துவதுபோன்றதோர் சம்பவம், இந்தக் கிழமைத் துவக்கத்தில், சட்டசபையில் நிகழ்ந்திருக்கிறது. நமது தி. மு. கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் குறித்து, சட்டசபையில், கேள்விகள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அமைச்சர் ஆச்சாரியார், அவைகளுக்குப் பதிலென, சிலவல குளறியிருக்கிறார். 'பாட்டாளிய ஏழைக் குழப்பு' எனும், மெல்லிய, உறுதியான நாலிழையில், அந்தப் பதில்கள் கோர்க்கப்பட்டுள்ளன. பொங்கல் வைத்து, பூஜை போட்டாலும், போகாத ஜன்மக் கூறாயிற்றே, அம்பர் ஆச்சாரியாருடையதுதான்! அதற்கு நாமென்ன செய்வது?

'கல்லக்குடி எதிர்ப்பு மறியலில் எவ்வளவுபேர் ஈடுபட்டனர்?' என்று, உழைப்பாளர் கட்சி உறுப்பினர் தோழர் அரங்கநாதன் வினவி இருக்கிறார். 'மொத்தம் 1813 பேர்கள்தான்' என்று, அமைச்சர் ஆச்சாரியார், பட்டியல் கொடுத்திருக்கிறார். அதன் பிறகு பல துணைக்கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

மறியல் பற்றியும் புதுக்கோட்டை சுயேச்சை உறுப்பினர் கேள்வி கேட்டுள்ளார். 'மறியல், சட்ட விரோதமானது; விரும்பக் கூடாதது; பொறுக்கக் கொள்ளக் கூடாதது' என்றெல்லாம் கூறி, தனது அறியாமையின் கிரகத்தைக் காட்டிக் கொண்டு இருக்கிறார். மக்களுக்கு ஏற்படுகின்ற குறைகளை எல்லாம் நிவர்த்தித்துக் கொள்ளவதற்குச் சிறந்த சாதனமாக வாக்குப் பெட்டி கிடைத்துவிட்ட பிறகு, மறியல் செய்வது ஆகாது, என்றும், விளக்கிக் கூறியிருக்கிறார் அந்த உறுப்பினர்!

மறியல் பற்றி தமது கருத்தைக் கூறி வினவிய புதுக்கோட்டை உறுப்பினருக்கு, மிக மிக முன்னெச்சரிக்கையாக அவர் பதில் கூறியிருக்கிறார். உறுப்பினர் குறிப்பிட்டுக் கேட்டதுபோல, மறியல் அனைத்துமே சட்ட விரோதமானது என்றோ, விருப்பத்தகாதது என்றோ, சகித்துக் கொள்ளக் கூடாதது என்றோ, ஒரே சொல்லில், 'ஆம்,' என்று தலை அசைத்துவிட, அமைச்சர் ஆச்சாரியாருக்கு திடசித்தம் ஏற்படவில்லை.

'ஆம்! மறியல், குற்றமானதுதான்,' என்று கூறிவிட்டால், எங்கே, அதைப் பற்றிக்கொண்டு, அந்த நாளில் காங்கிரஸ் கட்சியினராகத் தாம் ஈடுபட்ட 'மறியல்'களைக் குறித்தெல்லாம் கேள்விகள் கேட்டும், 'மறியல நியாயமானது—சட்டத்திற்குட்பட்டது,' என்று, தாம், அக்காலத்தில் கூறியதையும், எழுதியதையும் அப்படி அப்படியே எடுத்துக் காட்டி, வாதிடக் கிளம்பி, தம்மைத் திக்குமுக்காட செய்து, மூச்சுத் திணறடித்தால், என்ன செய்வது, என்று அச்சம் கொண்டவராய், அமைச்சர் ஆச்சாரியார், சர்வ ஜாக்கிரதையாகப் பதில் கொடுத்திருக்கிறார்.

'குற்றமுடையதா - இல்லையா, என்று முடிவு கூறுவது, மறியலின் தன்மையைப் பொறுத்திருக்கிறது' என்று, பகுவமாக, ஆச்சாரியார் கூறி இருக்கிறார். அத்துடன் நின்றுவிடாமல், பள்ளிகளுக்குமுன் மறியல் செய்வது, உறுப்பினர் கருதுவதுபோல் குற்றமுடையதுதான் என்றும், அவ்வாறு கொண்டதால்தான், மறியலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ததாகவும் அவர் பதில் கொடுத்து இருக்கிறார்.

அமைச்சர் ஆச்சாரியாருடைய பதிலில், எந்த அளவு நாணயமும், நேர்மையும் இருக்கிறது என்று பார்ப்போம்.

பள்ளிக்கூடத்துக்கு முன்போ அல்லது அன்னியத் துணிக்கடை முன்போ அல்லது கள்ளுக்கடை முன்போ 'மறியல்' செய்வது என்பது எந்த வகையிலும் சட்டவிரோதமானது என்று சொல்வதற்கில்லை. பள்ளி செல்லும் சிறுவர்களையோ மற்ற இரு கடைகளுக்குள் செல்லும் தனி நபர்களையோ [illegible] கண்ணியமான, நயமான வார்த்தைகளால் 'போகாதீர்கள்' என்று வேண்டிக்கொள்வதோ அல்லது [illegible] அறிவுரை கூறுவதோ, ஒருகாலும் குற்றமுடையதாக [illegible] ஒருவேளை, அவ்விடங்களுக்குள் [illegible] பலாத்காரமாகத் தொட்டிழுத்துத் தடுத்தால், மறியல் சட்டப்படியோ அல்லது பண்பு [illegible] அல்லது நாகரிகப்படியோ குற்றமுடையதாகும். பலாத்காரத்தில் இறங்காதவரையில், 'மறியல்' எந்த வகையிலும் குற்றமுடையதாகாது. நிற்க,

பள்ளிக்குமுன் மறியல் செய்வதைக் குற்றம் என்று ஆச்சாரியார் கூறுவதை, விவாதத்திற்காக நாம் ஒப்புக்கொள்ளுவதாக இருந்தாலும், தம்முடைய வீட்டுமுன் அமைதியான முறையில் 'மறியல்' செய்ய, அமைச்சர் ஆச்சாரியார், தி. மு. கழக ஊழியர்களுக்கு அனுமதி மறுத்தது எந்த வகையில் நியாயமுடையதாகும், என்று, அவரைக் கேட்கிறோம். பொதுவாகவே, எல்லா வகையான மறியலும் குற்றமுடையதுதான் என்று அவர் சொல்லுவதாக இருந்தாலும் கூட, அவர் வீட்டுமுன் மறியல் செய்யப்போவதாக அறிவித்துவிட்டுப்போன தி. மு. கழக தொண்டர்களுக்கெல்லாம், மறியல் செய்ய உரிமை அளிக்காமலே, அவர்கள்மீது, தடை சட்டத்தை மீறி, ஊர்வலம் சென்றார்கள் என்று குற்றஞ் சாட்டி, வழக்குத் தொடுத்து, தண்டனை கொடுத்து, சிறைக் கனுப்பச் செய்தது, எந்த வகையான நியாயமாகும்?

சென்ற காலத்தில், சட்டாய இந்தியை எதிர்த்து, பள்ளிமுன் மறியல் செய்தவர்களைக்கூடத்தான், 'இருட்டில் வந்தத் திருடனை கையில் கிடைத்ததை எடுத்து அடிக்கிறேன்' என்று, ஆணவத்தோடு கூறி, கிரிமினல் சட்டங்களை, இதே ஆச்சாரியார், மறியல் தொண்டர்கள்மீது கடுமையாக வீசினார்.

பின்னர் வந்த ஓமந்தூரார் காலத்தில்கூட, ஆரம்பத்தில் அவரும் ஒரு மாதிரியாக நடந்துகொண்டபோதிலும், நாள் செல்லச்செல்லப் பள்ளிமுன் மறியல் செய்வதை அனுமதித்துவிட்டார். நிற்க,

அமைதியான முறையில் மறியல் செய்வதே குற்றமென்ற நினைப்பின்கண், அத்தகைய மறியல் செய்யத் தூண்டினார்கள் என்பதற்காக, நமது தலைவர்கள் மீது வழக்குத் தொடுத்து தண்டனை பெற்றுக்கொடுத்தும், அந்தத் தண்டனை போதாதென்று கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று, ஆச்சாரியார் உயர்நீதிமன்றம் ஓடி இருப்பதும் பகிரங்க ரகசியமாகும். தாம் சொல்வதும் செய்வதும்தான் 'சிறந்த அறநெறி' என்ற ஆணவத்தோடு எண்ணிக்கொண்டு இருக்கிற ஆச்சாரியார், பொதுவாக, 'மறியல்' அனைத்தையும் ஏற்றுக்கொள்வதுபோலவும் பள்ளிமுன் மறியல் செய்வதை மட்டும் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பதுபோலவும் பேசுவது, வெறும் ஏமாற்று வித்தையேயாகும்.

மறியலில் ஈடுபட்டவர்களில் பலபேர், எழுத்தறிவற்றவர்கள், என்று, இறுமாப்போடு ஆச்சாரியார் கூறி இருக்கிறார். அவர் கூற்று, மெய்யா, பொய்யா என்பதைப்பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. நமது தி. மு. கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் எல்லாம் நிரட்சரகுட்சிகள் என்று கூறிக்கொள்வதின்மூலம் பொதுவாக, திராவிட மக்கள் மீதும், குறிப்பாக, நமது தி. மு. கழகத்தின் மீதும், தமக்குள்ள பரம்பரைப் பொறாமையின் அழுக்கத்தைக் காட்டிக்கொண்டார் என்றும், கேலி பேசி அவமோனமும் தமது உள்ளத்திற்கு ஆறுதல் தேடிக்கொண்டார் என்றுந்தான் நாம் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, 3 கோடி மக்களில் 1300 பேர் போராட்டத்தில் கலந்துகொண்ட தையா? 'மிக அற்பமானது' என்று அமைச்சர் ஆச்சாரியார், தனது உடைந்த நெஞ்சுக்கு உபசாரமாகக் கூறிக்கொள்கிறார். அமைச்சர் ஆச்சாரியார், வெறும் காங்கிரஸ்காரராக இருந்து, திருமறைக்காட்டுக்கு உப்பெடுக்கச் சென்றாரே, அப்போது, எத்தனை தொண்டர்கள் இவருடன் சென்றார்கள், என்ற கணக்கை, இப்பொழுது ஆச்சாரியார் அமைச்சராகிவிட்டதால், மறந்துவிட்டுப் பேசுகிறார்போலும்! விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தானே, தன்னுடன் தொடர்ந்து வந்தார்கள் என்பதைக் கருதிப் பார்க்கும்படி அமைச்சர் ஆச்சாரியாருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

எவ்வளவு பேர் சிறைக்குச் சென்றால், தாம் நுழைத்துள்ள கோணல் கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார் என்பதை அமைச்சர் ஆச்சாரியார் பகிரங்கமாக அறிவித்திருக்க வேண்டும். அப்படி ஒரு பந்தயம் போட அவருக்குத் தைரியம் உண்டா என்று அறைகூவி அழைக்கிறோம்.

இவருடைய கல்வித் திட்டத்தை எதிர்த்து மேலும் பல ஆயிரம் மக்கள் சிறை செல்வதாக இருந்தாலும், பெரும்பான்மையோர் முடிவுக்கு மதிப்பளிப்பார், இவர், என்று, இவரை யார் நம்பத் தயாராக இருக்கிறார்கள்? இவர் பெற்றிருக்கும் பயிற்சியே, அந்த நேர்மையான மக்களாட்சி முறைக்கு மாறுபட்டுக் கிடப்பதாயிற்றே?

கல்வியைத் தரக் குறைவாக்கும் இவருடைய திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும், என்று 139 சட்டசபை உறுப்பினர்கள் தீர்ப்பளித்தார்களே. அந்தத் தீர்ப்புக்கு இவர் அடிபணிந்தாரா? இல்லையே! 139 உறுப்பினர் என்றால், 139 லட்சம் மக்கள், இவருடைய கல்வித் திட்டத்தை கொல்லவேண்டுமென்று கட்டளையிட்டுள்ளார்கள் என்று பொருள் அல்லவா? 139 லட்ச மக்களின் முடிவையே, 'மிக அற்பம்' என்று கூறுகிறவர்போல் நடக்கக் கற்றுள்ளவர், 1,800 பேரைக் குறித்துக் குறைவாகப் பேசுவதில் துளியும் ஆச்சரியம் கிடையாது.

இது ஒரு பக்கம் இருக்க காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் இவரைத் தொலைந்து போகச் சொல்லி, இவருடைய மூகத்தை விகாரப்படுத்தியும் கூட, பெரும்பான்மையோர் முடிவிற்கு மதிப்பளிக்க வேண்டும் என்று பெருமதி சொன்னால் [illegible] ஆக்க வேண்டும் என்ற எண்ணவும் பெறாமல், 'மிக அற்பம்' என்றுதானே பதவியில், அட்டைபோல் ஒட்டிக்கொண்டு இன்னமும் இருக்கிறார்?

எனவே ஆச்சாரியார் இப்போ அவர் பரம்பரையின் சிறப்பு, 'அடிப்பயோ? உங்கப்பய மகனே! சிங்கண்டா!' என்று அடிமேல் அடி வாங்கி அழுது சண்டித்தனம் செய்யும் துறையைப் பற்றிக்கொண்டு கிடப்பதாகும்!

சென்னை மாநில ஆட்சி மொழி

தனி மசோதா பிரசுரம்

சென்னை, ஜன. 15—

சென்னை மாநிலத்தில், சர்க்கார் ஆட்சி மொழியாக தமிழ் மொழியை உபயோகிக்க வேண்டுமென்று விதித்து தோழர் ஏ. ஜெ. [illegible] மேல் சபையில் ஜனவரி 5-ம் தேதி கொண்டுவந்த தனி உறுப்பினர் மசோதா இவ்வாரத்திய கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இம்மசோதாவின் நோக்கம், காரணங்கள் பற்றிய அறிக்கை கூறுவதாவது:—

"சென்னை மாநிலத்தில், தமிழ் மொழியிலேயே சர்க்கார் அலுவல்கள் நடைபெற வேண்டுமென்பது பலருடைய கோரிக்கை இருந்து வருகிறது. இதன் மூலம்தான் பொதுஜனங்களுடன் சிறந்த முறையில் நேரடி தொடர்பு கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. தமிழ்மொழி வளமானது; பரந்து கொடுக்கக் கூடியது. சர்க்கார் மொழியாக வழங்கக் கூடியது. அரசியல் சட்டத்திலும் இது அனுமதிக்கப்படுகிறது. ஆனால் ஹைகோர்ட் தீர்ப்பு, டிக்ரிகள் சம்பந்தமாகத் தான் கட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, இந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு மக்கள் விருப்பத்தை அமுல் நடத்த இம்மசோதா உத்தேசித்திருக்கிறது."

கோசல்ராம் தேர்தல் வழக்கு

புதுடில்லி, ஜன. 13—

சென்ற பொதுத் தேர்தலில், சென்னை அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் கே. டி. கோசல்ராம் தேர்வு செல்லத் தக்கதல்லவென்று தஞ்சை தேர்தல் டிரிபூனல் தீர்ப்பு அளித்தது. அத்தீர்ப்பை ஜனவரி 25-ம் தேதி வரை கெஜட்டில் பிரசுரிக்கக் கூடாதென்று சுப்ரீம் கோர்ட்டு இன்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதாவது, அத்தீர்ப்பு, ஜனவரி 25-ம் தேதி வரை அமுலுக்கு வராது.

டிரிபூனல் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அனுமதி கோரும் மனுமீது, ஜனவரி 25-ம் தேதி விசாரணை நடைபெறும்.

ஆந்திராவில் கைதிகள் விடுதலை

கர்நூல், ஜன. 13—

சுமார் 700 கைதிகள் ராஜமகேந்திரம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்; பெல்லாரி சிறையிலிருந்து 275 கைதிகளும், நெல்லூரிலிருந்து 135 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டதையொட்டி, பொங்கல் பெருநாளை அடுத்து, ஆந்திர சர்க்கார் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். 'ஆந்திர சர்க்காரின் புதிய பரிசு இது,' என்று ஆந்திர சட்ட மந்திரி வின்வகாதம் கூறினார். இதுவரை 5,700 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

விநாயகம் கோஷ்டிமீது வழக்கு ஒத்திவைப்பு

தி. மு. கழகக் கூட்டத்தில் கலவரம் விளைவித்து, தோழர் கணேசன் தாக்கி, தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி காலை சேதப்படுத்தியதாக விநாயகம் கோஷ்டியைச் சேர்ந்த 6 பேர் மீது போலீசாரால் தொடரப்பட்ட வழக்கு, 11—1—54 அன்று, [illegible] கோர்ட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, மீண்டும் 19—1—54க்கு ஒத்திவைக்கப்பட்டது. பிராசிக்யூஷன் தரப்பு சாட்சிகளாக தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, என். ஏ. ரசீத், ஏ. எல். சி. சஞ்சீவி ஆஜராயிருந்தார்கள். (ந. நி.)

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 16—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அசிகர அய்யர் முன்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விவரம் தொடர்ந்து தரப்படுகிறது:—

80-வது சாட்சி

80-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட சேஷ அய்யங்கார் கூறியதாவது:—

“நான், சிவன் கோவில் தெருவில் வசிக்கும் ஒரு அட்வகேட்; அந்தத் தெருவில் 5 அல்லது 6 பிராமணர்களுடைய வீடுகள் இருக்கின்றன; ஜூலை 15-ந் தேதி காலை 9-30 மணிக்கு நான் கோர்ட்டிற்குப் போகத் தயாராகிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது வெளியே சப்தம் கேட்டது; 15 அல்லது 20 பேர் கொண்ட கூட்டம் கற்களை வீசிக்கொண்டு தெரு வழியாக வருவதைப் பார்த்தேன்; என் வீட்டின் மீதும் அவர்கள் கற்களை எறிந்தனர்; கூட்டத்தில் இருந்த ஒருவர் சைக்கிள் வைத்திருந்தார்; நான் வீட்டுக் கதவைச் சாத்தி உள்ளே போய்விட்டேன்; என் வீட்டுக் கதவைக் கூட்டத்தினர் கழிகளால் அடித்தனர்; ஆனால், அதனைத் திறக்க முடியாததால் அவர்கள் போய்விட்டனர்; 90-வது எதிரி சீனிவாசனைக் கூட்டத்தில பார்த்தேன்; என் வீட்டின்மீது கல்லெறிந்தவர் அவர்தான்; பிறகு என்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்; செப்டம்பர் 6-ந் தேதி அத்தூக்குடி அடிஷனல் சப்-மாஜிஸ்திரேட் முன்பு 90-வது எதிரியை அடையாளம் காட்டினேன்.”

திரு. பி. எஸ். சந்தய்யாபிள்ளையின் குறுக்கு விசாரணையின் சாட்சி கூறியதாவது:—

“என்னுடைய வீட்டின் முன்பு 90-வது எதிரியை நான் பார்த்தேன்; எனக்கும் அவருக்கும் தொழில் சம்பந்தமான தொடர்பில்லை”

81-வது சாட்சி

பின்னர் 81-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட சுப்பராம அய்யர் கூறியதாவது:—

“நான், புதுக் கிராமத்தில் விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோடுக்குப் பிரிந்துபோகுமிடத்தில், மேற்குப்புற வரிசையில் வசித்து வருகிறேன்; பிராசிகியூஷன் தரப்பு 23-வது சாட்சி பதமநாப அய்யர், அதே தெருவில், என் வீட்டிற்கு எதிர் வரிசையில் வசித்து வருகிறார்; ஜூலை 15-ந் தேதி காலை 10 மணி சுமாருக்கு நான் வீட்டில் இருந்தேன்; அப்போது கூச்சல் கேட்டது; 20 அல்லது 30 பேர்கள் தெருவில் தடி., கற்கள் சகிதம் வருவதைப் பார்த்தேன்; அவர்கள் வீடுகளின் மீது கற்களை எறிந்தனர்; ராமலிங்க நாடாரின் வீடு, என் வீட்டுக்கு எதிரிலுள்ளது; ராமலிங்க நாடார் தம்முடைய வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டு, வீடு, புகுணுடையதென்றார்; அதன் பிறகு கூட்டம் போய்விட்டது; என் வீட்டின்மீதும் கற்கள் வீசப்பட்டன; ஒரு கல்லால் ஜன்னல் கண்ணாடி சேதப்பட்டது; நான் கதவை மூடிவிட்டேன்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; கூட்டத்திலிருந்த எவரையும் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை.”

82-வது சாட்சி

பிறகு, 82-வது சாட்சியான எஸ். அம்பி அய்யர் கூறியதாவது:—

“நான் புதுக்கிராம வாசி; அன்று காலை 9 மணிக்கு 20 அல்லது 30 பேர் கொண்ட கூட்டம் வடக்கே இருந்து வீடுகள்மீது கற்களை வீசிக்கொண்டு வந்தது; என் வீட்டிற்கு முன்பு டாக்டர் சேஷ அய்யர் குமாரர் தமது சைக்கிளில் வந்திருந்தார்; கூட்டத்திலிருந்த ஒருவர் தடியால் சைக்கிளை அடித்தார்; நான் உள்ளே சென்று கதவை மூடினேன்; கூட்டம், தழிகளால் அடித்து, கதவைத் திறக்க முயன்றது; அம்முயற்சி பலிக்காமல் போகவே, அவர்கள் தெற்கே போய் விட்டார்கள்; கூட்டத்திலிருந்த ஒருவரைக்கூட என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை.”

83-வது சாட்சி

83 வது சாட்சி டாக்டர் பி. நாராயணசாமி கூறியதாவது:-

‘நான், தூத்துக்குடி சர்க்கார் ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு மெடிகல் ஆபீசர்; ஜூலை 15-ந் தேதி பிற்பகல் 3-30 மணிக்கு டியூட்டியிலிருக்கையில் 1864 நெ. போலீஸ் கான்ஸ்டேபிளை (18-வது சாட்சி) பரிசோதித்தேன்; அவரது காலில் ரத்தம் கட்டியிருந்தது; அன்று காலை 8-30 மணிக்கு நடந்த கல் வீச்சில் பட்ட காயமெனத் தோன்றியது. காயம் சாதாரணமாக இருந்தது; நான், காய சர்டிபிகேட் கொடுத்தேன்; ஆயுத ரிசர்வ் போலீஸ் கான்ஸ்டேபிள் நெ. 1773 (11வது சாட்சி)யை நான் பரீட்சித்து, அவரது வலது காலில் ரத்தம் கட்டியிருந்ததைப் பார்த்தேன்; அது, சொற்பமான காயமாக இருந்தது; கல் வீச்சினால் ஏற்பட்டது போலத் தோன்றியது; அன்றே காய சர்டிபிகேட் கொடுத்தேன்; மலபார் ஸ்பெஷல் போலீஸைச் சேர்ந்த சலாமைப் பரீட்சித்த போது, அவரது தொடையில் ரத்தம் கட்டிப் போயிருந்தது; அதுவும், கல்வீச்சால் ஏற்பட்டிருக்கலாம்; அவருக்கும் காய சர்டிபிகேட் வழங்கினேன்; அன்று பிற்பகல் 1 மணிக்கு 12-வது சாட்சி சங்கரநாராயண ஐயரைப் பரீட்சித்தேன்; அவருக்கு 2 காயங்கள் இருந்தன; வலது முன் கையில் வெட்டுக் காயமிருந்தது; இடது முன் கையில் மற்றொரு வெட்டுக் காயமிருந்தது; அவரது காலில், அரிவாளால் அவை ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது; அம்மாதிரி, அரிவாளால் காயமுண்டாக்கக்கூடும்; அக்காயங்கள் பலகாயமாகும்; அன்றே காய சர்டிபிகேட்டைக் கொடுத்தேன்; மாலை 5 மணிக்கு 313 நெ. ரயில்வே போலீஸ் கான்ஸ்டபிளைப் பரீட்சித்துப் பார்த்தேன்; அவரது இடது கையில் சிறிய ஊமைக் காயம் இருந்தது; அது கல்லெறிதலால் ஏற்பட்டிருக்கலாம்; காய சர்டிபிகேட் ஜூலை 16-ந் தேதி கொடுத்தேன்; இரவு 9 மணிக்கு 73-வது சாட்சியான 413 நெ. ஹெட்கான்ஸ்டபிளைப் பரீட்சித்தேன்; அவரது வலது காதுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய ஊமைக் காயமிருந்தது; ஜூலை 15-ந் தேதி எறிந்த கல் வீச்சால் அது ஏற்பட்டிருக்கலாம்; ஜூலை 15-ந் தேதி காலை 9-30 மணி முதல் மாலை 4 மணி வரை போலீசாரால் கொண்டுவரப்பட்ட பல நபர்களை, நான் பரீட்சித்துப் பார்த்தேன்; சுப்பையா என்பவருக்கு வலது முன் கையில் இரண்டு ஊமைக் காயங்களிருந்தன; அவை, தடியடியால் ஏற்பட்டதாக அவர் கூறினார்; அந்த மாதிரி, அக்காயம் ஏற்படலாம்; நான் 5-வது எதிரி நடராஜனை ஜூலை 16-ந் தேதி காலை 10 மணிக்குப் பரீட்சித்துப் பார்த்தேன்; அவரது இடதுபுற நெற்றியில் ஊமைக் காயமிருந்தது; அவருக்குத் தடியடியால் காயமேற்பட்டதாகச் சொல்லப்பட்டது; அன்று அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்; போலீசார், குண்டுக் காயங்களுடன் 16 பேரைக் கொண்டு வந்தனர்; 4 பேர் இறந்துபோயினர்; 3 பேர் ஆஸ்பத்திரிக்கு வருமுன்பே இறந்துவிட்டனர்; ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வந்த பிறகு இறந்து போனார்; இறந்த 4 பேருக்கும் குண்டுக் காயமேற்பட்டிருந்தது.”

திரு. ஆர். தண்டபாணியின் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“12-வது சாட்சி சங்கரநாராயண ஐயரை நான் பரீட்சித்துப் பார்த்தபோது, டாக்டர் சந்திரசேகரனை அவருக்குச் சிகிச்சை செய்யச் சொன்னேன்; அவரது அடையாளக் குறிகளை காய சர்டிபிகேட்டில் நான் குறிக்கவில்லை.”

84-வது சாட்சி

84-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட எம். எஸ். கிருஷ்ண அய்யங்கார் கூறியதாவது:—

“நான் இம்பீரியல் பாங்கி ஏஜண்டின் சகோதரன்; நாங்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கிறோம்; ஜூலை 15ந் தேதி நான் பெரிய காட்டன் ரோடிலுள்ள எனது கடைக்குப் போனேன்; காலை 10-30 மணிக்கு புதுக்கிராமத்திலுள்ள எனது வீடு சூறையாடப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்தது; நான் வீடு வந்தபோது, சிலர், வீடுபுகுந்து சொத்துக்களை சேதப்படுத்தியதாக என் மனைவி கூறினாள்; படங்கள், மின்சார பல்புகள், எனது டைப்ரைட்டர் ஆகியவைகள் சேதப்படுத்தப்பட்டிருந்தன; நான் வைத்திருந்த 250 நோட்டுப் புத்தகங்களும், 4 ஆர்லுலுடு இன்புப் புட்டிகளும் காணப்படவில்லை; மறுநாள் என்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.”

85-வது சாட்சி

85-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட கனகாம்புஜம்மாள் (முன் சாட்சி கிருஷ்ண அய்யங்கார் மனைவி) கூறியதாவது:—

‘ஜூலை 15-ந் தேதி காலை 10 மணிக்கு, நான், என் வீட்டிலிருக்கையில் தெருவில் சப்தம் கேட்டது; வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்தது; வீட்டின் பக்கத்திலிருந்து, ஒரு கூட்டத்தால் வீட்டின்மீது கற்கள் வீசப்பட்டன; நான் பயந்து, வீட்டின் மூன பகுதிக்குப் போனேன்; வேறு பக்கத்திலிருந்த சிலர், படங்களைச் சேதப்படுத்த முயன்றுகொண்டிருந்ததைப் பார்த்தேன்; அங்கு தங்கியிருக்கப் பயந்ததால உள் அறைக்குச் சென்று உட்புறம் தாளிட்டுக் கொண்டேன்.’

86-வது சாட்சி

86-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட புதுக்கிராம வக்கீல் ஏ. வெங்கடாசல அய்யர் கூறியதாவது:—

“என் வீட்டின் மீது ஜனக் கூட்டம் கல்லெறிந்தது; கதவை மூடி, வீட்டிற்குள் இருந்தேன்.”

87-வது சாட்சி

87-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட வக்கீல் ராமகிருஷ்ண அய்யர் கூறியதாவது:—

“நான் 82வது சாட்சி சுப்ப அய்யர் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வசிக்கிறேன்; ஜூலை 15-ந் தேதி என ஆபீஸ் அறையில் இருக்கையில் சப்தம் கேட்டது; 30 பேர் கொண்ட கூட்டம் கல்லெறிந்ததைப் பார்த்தேன்; ஒரு கல் என் இடது காலில் பட்டது; அற்ப காயமாக இருந்ததால், வைத்தியரிடம் போகவில்லை; கூட்டத்தில் இருந்த ஒருவரையும் என்னால், அடையாளங் காட்ட முடியாது.”

88-வது சாட்சி

புதுக்கிராமம் அட்வகேட் வி ஜீ. ராஜாமணி அய்யர் 88-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“என் வீட்டைக் கூட்டத்தினர் தடிகளால் தட்டினர்; கதவு சேதமடைந்தது; அடுத்த வீடு நாடார் வீடாக இருந்ததுபற்றி அது தாக்கப்படாமல் விடப்பட்டது.”

திரு. தண்டபாணியின் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“எனது வீட்டின் முன் அறையில், எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு நின்றேன். அங்கிருந்தபடியே நான் இருபக்கங்களிலும் 3 வீடுகளில் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்க முடியும்.”

89-வது சாட்சி

அடுத்து, 89-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட பி. எஸ். வேங்கடராம ஐயர் கூறியதாவது:—

“என் வீட்டு வாயிலை கூட்டத்தினர் உடைத்து, முன்வாயில் கதவை தட்டினர்; ஆனால், அதனை அவர்கள் திறக்க முடியவில்லை; என் வீட்டின் முன்புறமிருந்த பல்புகள், ஷேடுகள் இவற்றை உடைத்தனர்.”

90-வது சாட்சி

கோதண்டராம ஐயர் (அட்வகேட்) 90-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான் மேலத் தெப்பகுளம் தெருவில் வசித்து வருகிறேன்; ஜூலை 15-ந் தேதி தேவஇரக்கம் தமது சைக்கிளை வெளியே வைத்துவிட்டு, என் ஆபீசுக்கு வந்தார்; தெருவில் வந்த 30 பேர் கொண்ட கூட்டம் கோஷித்துக் கொண்டும், கற்களை வீசிக்கொண்டும் கீழ ரத வீதியிலிருந்து வந்தது; என வீட்டின் மீது அவர்கள் கல்லெறிந்தனர்; நாங்கள் எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டோம்; தாழ்வாரத்திலிருந்த எனது கட்டிலை கூட்டம் உடைத்தது; தேவஇரக்கத்தின் சைக்கிளை அவர்கள் என் வீட்டின் முன்புள்ள தெப்பக்குளத்தில் எறிந்தனர்; என்னுடைய பெயர்ப் பலகையும் தெப்பக்குளத்தில் எறியப்பட்டது; முதல் எதிரி, 5-வது எதிரி, 4-வது எதிரி இவர்களை எனக்கு நன்றாகத் தெரியும்; கூட்டத்திலிருந்த எவரையும் என்னால் அடையாளம் காட்ட முடியாது.”

திரு சக்ரையப்பா பிள்ளை குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

“எனக்கு சென்ற 2 அல்லது 3 வருஷமாக முதலாவது எதிரி கே. வி. கே சாமியைத் தெரியும்; அவருக்காக 4 அல்லது 5 வழக்குகளை நடத்தியிருக்கிறேன். சென்ற சில மாதங்களாக தி. மு. கழகக் கட்சி வக்கீலாக இருக்கிறேன்; முதல் எதிரி உப்பளத் தொழிலாளர் சங்கத் தலைவர் என்று எனக்குத் தெரியும்; கரம்பு நிலங்களை உழும்படி உழவர்களைத் தூண்டிக்கொள்ளும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டதற்காக முதல் எதிரிக்கு 25 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது; 5-வது எதிரிக்கு நான் எனது சொந்த ஹோதாவில் ஒரு வழக்கு நடத்தினேன்.”

நீத்தார் நினைவு நாள் கூட்டம்

31—12—53 மாலை 6 மணிக்கு சக்ரமல்லூரில் தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் கண்ணன், பாலசுப்ரமணியம், நடராசன், பார்த்தசாரதி, இரா. செழியன் பேசினர்.

“ஆரம்பக் கல்வித் திட்ட மறியலில் சிறை சென்ற தோழர் விஜயகம் மறைவு, இயக்கத்திற்குப் பெருநஷ்டம்,” என்று, தோழர் செஞ்செழியன் கூறினார். அன்னார் மனைவி திருமதி பர்வதவர்த்தனி அம்மையார் அவர்கள், தூத்துக்குடி நிதிக்காக ரூ. 50/ மாவட்டச் செயலாளர் ஏ. எல். சி. கிருட்ணசாமி அவர்களிடம் நன்கொடையாகத் தந்தார். (ந. நி.)

அம்மன்புரத்தில் தி. மு. கழகத் துவக்கம்

26—12—53-ல், திருச்செந்தூர், தாலுகா அம்மன்புரத்தில், தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் கே. ஆர். பி மணிமொழியன் தலைமையில் நடைபெற்றது அதுபோது, செயலாளராக மா. கணபதியும், துணைச் செயலாளராக கோ. துரைராசனும், மாவட்டப் பிரதிநிதியாக ந. சாமியும், பொருளாளராக மூ. நம்பியும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் பெ. சுப்பிரமணியன், ஏ. கே. முத்து, டி. இலக்குமணன், எஸ். பிச்சாண்டி, கே. கே. எஸ் குணசிங், பி ராஜசிங், எம். செல்வன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

11—1—54-ல், தோழர் எஸ். எஸ். சிவசூரியன் தலைமையில், கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் ச. வீரபாகு, கே. ஆர். பி மணிமொழியன், சங்கரலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் செ. அறவேந்தன் கொடியேற்றுவித்தார்.

ஆயிலம் கிராமத்தில் தி.மு.கழகத் திறப்புவிழா

8—1—54 மாலை 6 மணிக்கு, ஆர்காட்டிற்கு அடுத்த ஆயிலம் கிராமத்தில், திறப்பு விழா பொதுக்கூட்டம் தோழர் அ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி, தோழர்கள் ஏ. எல். சி கிருட்ணசாமி, புலவர் மணி, எழிலன் பேசினர்.

வீரக்கல் கிராமத்தில் தி. மு. கழகம் துவக்கம்

11—1—54-ல், திண்டுக்கல் வட்டாரத்தைச் சேர்ந்த வீரக்கல் கிராமத்தில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் வி. ஏ. பெருமாள் செயலாளராகவும், பி. வேலு துணைச் செயலாளராகவும், வி. முத்து பொருளாளராகவும், சி. பழனிச்சாமி மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் மூவர் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாத்தான்குளம் தி. மு. கழகம்

3—1—54-ல், தி. மு. கழக முதல் ஆண்டு விழா, பெரியார் சதுக்கத்தில், தோழர் வி ஞான முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: எஸ். வீரபாகு, சங்கரலிங்கம், வின்சென்ட், கே. சேர்மத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் வி. ஞானமுத்தவால், தோழர் எஸ். வீரபாகுவிடம் தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்கு ரூ 10 அளிக்கப்பட்டது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஹோட்டின் பீடி முதலாளிமீது வழக்கு

தோழர் கருணாநிதி கலந்துகொண்ட திருச்சி — மதுரை ரோடு கிளைக் கழகத் துவக்க விழாவில், கலவரம் விளைவித்தது சம்பந்தமாக, ஹோட்டின் பீடி முதலாளி எஸ். எம். நூர்தீன் மீது நடைபெற்றுவரும் வழக்கு, மீண்டும் 21—1—54 அன்று நடைபெறும்.

நவாப் தர்பார்!

திருவண்ணாமலை, ஜன. 16-

திருவண்ணாமலை வன்னிய குல சத்திரிய வீதியிலிருக்கும் தி. மு. கழக அனுதாபிகளாலும், வாலிபத் தோழர்களாலும் 14—1—54 காலை பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, தி. மு. கழகக் கொடி யேற்றுவிழா நடத்திவைக்கப் பட்டது.

மாலை 5 மணிக்கு அத்தொகுதி காங்கிரஸ் கவுன்சிலர் தன்னுடைய சகாக்களுடன் வந்து, இவ்விடம், தி. மு. கழகக் கொடி கூடாது; இதை அப்புறப்படுத்த வேண்டும், என்று தாறுமாருகப் பேசி, கொடிக் கம்பத்தை பிடுங்கி எறிந்துவிட்டார்.

மேற்படி தொகுதி இயக்கத் தோழர்களும், ப. உ. சண்முகம் அவர்களும்; இயக்கப் பிரமுகர்களும், போலீசில் புகார் செய்தனர்.

மறுநாள் காலை 10 மணிக்குப் போலீஸ் அதிகாரியான சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மேற்படி காங்கிரஸ் கவுன்சிலரைக் கூப்பிட்டு, 'நீங்கள் செய்தது தவறு; அவர்களுடைய கொள்கைப்படி போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல், எங்கு வேண்டுமானாலும் கொடியேற்று விழா செய்யலாம்; அதில், நீர் குறுக்கிடக் கூடாது,' என்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

பிறகு பகல் 12 மணிக்கு பிரபல விவசாயி வேலு என்பவரால் கொடியேற்றி வைக்கப்பட்டது.

'பரப்பிரம்மம்' நாடக வசூல்

தூத்துக்குடி நிதிக்கு அளிக்கப்பட்டது

திருச்சி, ஜன 16—

பீமநகர் 4-வது வட்ட தி. மு. கழக சார்பில், கிளைக்கழக நிதிக்காக, 'பரப்பிரம்மம்' என்ற நாடகம், 14—1—54 இரவு 10 மணிக்கு தோழர் [illegible] சம்பத் தலைமையில் நடைபெற்றது. அதில் கிடைத்த தொகை ரூ. 101 கழக நிதியைவிட முக்கியமாக இன்று உள்ள தூத்துக்குடி வழக்கு நிதிக்காக அந்தத் தொகையை அளிப்பதென முடிவு செய்து, நாடகத்தின் இடையில் தோழர் இளவழகன் அவர்களால், தோழர் சம்பத்திடம் அளிக்கப்பட்டது.

பின்னர், தோழர் சம்பத் அவர்கள், 'நாடகமும்—நாமும்' என்ற பொருள் பற்றி விளக்கவுரையாற்றினார்.

"வாழ்த்தும் நன்றியும்"

"பொங்கல் வாழ்த்து அனுப்பிய அன்பர்களுக்குத் தனித்தனியே எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். எனவே, இதன் மூலம், என் புத்தாண்டு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்," என்று தூத்துக்குடி தோழர் எம். ரத்தினம் அறிவிக்கிறார்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை வருகை

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், திருநெல்வேலி தூத்துக்குடி ஆகிய நகரங்கட்கு 23—1—54, 24—1—54-ந் தேதிகளில் வருவார். நேரில் ஒப்புக்கொண்டு, தூத்துக்குடி நகர சார்பில் ரூ. 2,000-மும், திருநெல்வேலி நகர சார்பில் ரூ. 1000-மும் தூத்துக்குடி வழக்கு நிதிக்கு வசூல் செய்து கொடுக்குமாறும், நிதி சேர்ந்த விபரங்களை உடன் அறிவிக்கும்படியும் கூறி வந்திருக்கிறார்.

திருநெல்வேலி தோழர் எஸ். வீரபாகு அவர்கள், குறித்தபடி நிதி வசூலாகவில்லை யென்றும், தற்சமயம் மழையுமிருக்கிறதென்றும், ஆகவே, 31—1—54 முதல் வருகையை வைத்துக் கொள்ளும்படியும் கடிதம் எழுதியுள்ளார். 31—1—54-ல் மாயவரம் செல்கிறார்.

தூத்துக்குடியிலும், குறித்தபடி, தொகை, வசூலாகிவிட்டதாகச் செய்தி வந்து சேராத காரணத்தினால், தோழர் அண்ணாதுரை அவர்கள், 23—1—54, 24—1—54-ந் தேதிகளில் வருவதற்கில்லை குறித்தபடி நிதி வசூல் சேர்ந்ததும். பிப்ரவரி மாதத்தில் தேதியை உறுதி செய்து, அதுபோல் 2, 3 நாட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வார். நிகழ்ச்சி விபரம் பின்னர் வெளிவரும்.

திருநெல்வேலி மாவட்டத்தில், மற்றும் சில முக்கிய நகரங்கட்கும் வரும்படி அழைப்புகள் அனுப்பும் தி. மு. கழகத் தோழர்கள். குறைந்தது ரூ. 250 தூத்துக்குடி நிதிக்கு வசூல் செய்துகொடுக்க முன்வர வேண்டும்; நிதி வசூல் செய்து, 'டிராப்டு' வாங்கி அனுப்பும் ஊர்களை மட்டுமே நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

தூத்துக்குடி, திருநெல்வேலியில் மட்டும் மாலை பொதுக்கூட்டங்களும், மற்ற இடங்களில், தி. மு. கழகத் தோழர்களைச் சந்தித்து, நிதி அளிப்புக்கு நன்றி கூறுமளவில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறும் வேண்டுகிறோம். எங்கும் ஊர்வலங்கள் கூடாது.

தூத்துக்குடி நிதி வசூல் முக்கியம் என்ற காரணத்தினால், கழகத் தோழர்கள், பொதுச் செயலாளர் வருகை நாள் குறிப்பிடுவதற்கு முன்னரே வசூல் வேலைகளை முடிக்கும்படியும், கழகத் தோழர்களும், பொது மக்களும் தூத்துக்குடி நிதிக்கு தாராளமாக உதவியும், ஆதரவும் அளிக்கும்படியும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்திற்குள். வருகை விபரம் அறிந்து தேதிகள் உறுதி செய்யப்படும்.

தி. மு. கழகத் தலைமை நிலையம்
'அறிவகம்'
இராயபுரம் சென்னை.

தங்கள் அன்புள்ள,
தூத்துக்குடி நிதி
பொறுப்பாளர்

காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் நாட்டு மிராண்டிகளாம்!

தான் 'ரிங் மாஸ்டர்' போல் இருக்க வேண்டி இருக்கிறதாம்!

தனது பதவி பற்றி ஆச்சாரியார் கற்பனை

அழகப்பாநகர், ஜன. 13—

"அமைச்சர் பதவியினால் லாபமேதுவும் கிடையாது; அமைச்சர் நிலையும், சர்க்கஸ் நிர்வாகி (மானேஜர்) நிலையும்ஒரே தன்மை வாய்ந்தது; ஏனென்றால், தாம் சர்க்கசின் நிர்வாகி என்ற முறையில், மனச்சாந்தி அவருக்கு இருக்கும்; ஆனால், அவருக்கு மகிழ்ச்சி ஏற்படாது; ஏனென்றால், காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை சர்க்கஸ் நிர்வாகிக்குத் தான் ஏற்படுகிறது."

—இவ்வாறு, திருச்சியிலுள்ள அழகப்பா தொழிற்சாலையின் தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசுகையில், சென்னை முதல் அமைச்சர் சி. இராசகோபாலாச்சாரியார் கூறினார்.

வீராங்கனை தாய்மார்கள்!

மாஸ்கோ, ஜன. 16—

ரஷ்யாவில் 10 குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு "வீராங்கனை தாய்மார்கள்" என்ற பட்டம் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி பட்டம் பெற்ற ரஷ்யத் தாய்மார்களின் எண்ணிக்கை 38,000 ஆகும்.

பொதுவுடமையர் 'தந்திரத்தை' முறியடிக்க அமைப்பாம்!

சுரண்டல் அமைப்பைப் பாதுகாக்க மதுரையில் 'கூட்டு' முயற்சி!

மதுரை, ஜன. 14—

கம்யூனிஸ்டுகளுடைய நடவடிக்கைகளை முறியடிக்கவும், ஐக்கிய ஜனநாயக முன்னணியின் தந்திரங்களை மக்களுக்கு எடுத்துக் காட்டவும், சென்னை மாநிலத்திற்கென்று ஒரு [illegible] [illegible] தொழிலாளர்களும், இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் [illegible] கம்யூனிஸ்டு [illegible] தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கொண்ட கூட்டத்தில் [illegible] பட்டது.

"கம்யூனிஸ்டு எதிர்ப்பு மத்திய ஸ்தாபனம்" என்று அழைக்கப்படும் இந்த ஸ்தாபனத்தில், எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த 51 பிரதிநிதிகள் இடம் பெறுவர்; கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தத் [illegible] [illegible] 10 [illegible] [illegible]

தென்னிந்திய [illegible] தொழிலாளர் [illegible] காரியதரிசி தோழர் [illegible] கிருஷ்ணசாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

புதியம்புத்தூர் தி. மு. கழகம்

10—1—54-ல், இவ்வூர் தி. மு. கழக செயற்குழு கூட்டம், தோழர் பெ. துரைச்சாமி தலைமையில் நடைபெற்றது. அத்தூத்துக்குடி தோழர்கள் கே. என். சுப்பையா, கே. வி. கே. சாமி ஆகியவர்களின் தாய்மார்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

★★★★★★★★★★★

திருவொற்றியூர்
சீனிவாசா டாக்கீசில்
17—1—54 ஞாயிறு மாலை
6 மணிக்கு

'வாலிப முன்னேற்ற ஒற்றுமைக் கழக' நிதிக்காகவும், கலை வளர்ச்சி மன்ற நிதிக்காகவும்

கலைவாணர் N. S. கிருஷ்ணன்,
T A மதுரம் குழுவினர் நடிக்கும்

பணம் (நாடகம்)

டிக்கட்டுகள்: ரூ. 5, 3, 2, 1, அணா 8

★★★★★★★★★★★

வ. உ. சி. மன்றம்

2-வது ஆண்டு விழா

17—1—54 ஞாயிறு காலை 6-30 மணிக்கு, கோடம்பாக்கம், ஆற்காடு ரோட், வ. உ. சி. மன்றம் முன்புறத்தில், வ. உ. சிதம்பரனாரின் உருவப்படம், கப்பலில் ஊர்வலமும், பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவளித்தலும், மாலை 5 மணிக்கு கே. ஏ. சாமிநாதன் குழுவினரால் நாதசுர இன்னிசையும் நடைபெறும். மாலை 6 மணிக்கு தோழர் வ. சங்கரநாராயணன் தலைமையில், தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், புலவர் நன்னன், ம. வி. நாராயணசாமி, தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

குறள் வகுப்பு

புரசை, குறள் நெறிக் கழகத்தின் சார்பில், 17—1—54 ஞாயிறு காலை 9 மணியளவில். புரசை கங்காதீசுவரர் கோவில் தெரு, [illegible] கழக ஆண்டு [illegible] குறள் வகுப்பு நடைபெறும். ஆசிரியர்; டி. எஸ் வேலன்

அன்பழகன் இலங்கை பயணம்

கொழும்பு, ஜன. 16—

கொழும்பில், 16, 17, 18-1-54 தேதிகளில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மாநாட்டில் பங்கு பெற சென்னை பச்சையப்பன் கல்லூரி துணைப் பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ. அவர்கள், 15—1—54 காலை சென்னையிலிருந்து விமானம் மூலம் இலங்கை வருகிறார்.

திருக்குறள் மாநாட்டு நிகழ்ச்சி முடிவுற்று, 19-1-54-ல், இலங்கை தி. மு. கழகச் சார்பில் நடத்தப்பெறும் பொங்கல் விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்.

பண்ணுருட்டியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

தோழர் நெடுஞ்செழியன் பேச்சு

6—1—54 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், ஓர் பொதுக் கூட்டம் தோழர் எஸ். சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழகம் மேற்கொண்ட அறப்போர்களின் காரணங்களை விளக்கியும், தி. மு. கழகம் என்றுமே, பிரச்சினைகளை, ஜனநாயக முறையில் அணுகி, படிப்படியாக, ஆனால், அமைதியாக, அதனதன் வழியில் தீர்வு காண விரும்புகிறது என்று குறிப்பிட்டுவிட்டு, ஆச்சாரியாரின் புதுக் கல்வித் திட்டத்தின் கொடுமையை விளக்கிச் சொற்பொழிவாற்றினார். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சிறு குழந்தை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு 'ஷிப்டு' முறைக்கு முந்திய 4-ம் வகுப்பு மாணவர்களின் தரம்கூட இருப்பதில்லை. என்றாலும், ஆறும் படிவம் வரையிலும், மாணவர்கள், அதிகாரிகளால், எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுத அனுப்பப்படுகின்றனர். அங்கே ஒரு பெரும் 'கொலை' நடக்கிறது. அதிலும் தப்பித்தவறி தேர்வு பெறுகிறவர்கள், பெரும்பாலும் கல்லூரிப் படிப்பிற்கு தகுதி பெற்றவர்களாக இருப்பதில்லை.

ரஷ்யாவிலும், மக்களும் அரசாங்கமும் இதை இப்போது வெகுவாக உணர்ந்துள்ளனர். அவர்கள் இப்போது முழு நேரப் படிப்பு வேண்டுமென விரும்புகின்றனர். ஆனால் உடனடியாக அதைச் செய்ய இப்பொழுதுள்ள பொருளாதாரம் இடந்தரவில்லை. இருந்தாலும், தொடக்கக் கல்வியில் 5-ம் வகுப்புக்கு மட்டும் முழு நேரக் கல்வி போதிக்கும் முன்னேற்பாடு அழைக்கப்பட்டு, ஒரு நல்ல ஆரம்ப முறை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

சுதந்திர இந்தியாவின் இளைஞர்கள், மற்றைய நாடுகளின் இளைஞர்களோடு சமமாக நிற்க வேண்டியது அவசியம்.

மூன்றாந்தரமான கல்வியை வைத்துக்கொண்டு, முதல் தரமான மக்களை நாம் பெற முடியாது.

அரைகுறையாக செய்யப்படும் எதுவும் சரியாக இருப்பதில்லை; கல்வியிலெல்லாம், விஞ்ஞான ரீதியான அனுபவ முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமேயன்றி, அரசியல்வாதிகளால், மலிவிற்காகவோ, விளம்பரத்திற்காகவோ கொள்ளப்படும் முறைகளைக் கைக்கொள்ளலாகாது. பள்ளி செல்லும் எல்லா மாணவர்களுக்கும் நல்லதொரு ஆரம்பக் கல்வி தரப்பட வேண்டும்.

டெல்லி பல்கலைக் கழகத்தின், 31-வது பட்டமளிப்பு விழாவிலே பேசும்போது 'ஷிப்டு' முறையைப் பற்றி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறிய பொருத்தமான வார்த்தைகளைக் கூறி இதை முடிக்கிறேன்

'கல்வி நிலையங்கள் வியாபார நிலையங்களாக ஆக்கப்பட்டுவிட்டன. தொழிற்சாலைகளில் மட்டுமே காணக்கூடிய 'ஷிப்டு' முறையை நீங்கள் புகுத்தியுள்ளீர்கள். அந்த நிலையில் நீங்கள், மாணவர்களைக் கவனிக்கவே உங்களால் முடியாமற் போய் விடுகிறது''.

—ஒரு கல்வி நிபுணர்,
திருவரங்கம்.
(10-1-54, 'மெயில்'.)

"மல்லிகா"

சென்னை, ஜன. 15—

14-1-54ல், சென்னை பொங்கல் விழா கூட்டத்தில், 31வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் நடராசன் அவர்களுடைய புதல்விக்கு, தோழர் அண்ணாதுரை அவர்களால், 'மல்லிகா' என்ற பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம் நன்றியுடையது--பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.